## ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–600 006
## மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்

ந.க.எண்: 1680/A11/பமேகு/ஒபக/2023, நாள். 22/12/2023.

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி–பள்ளி மேலாண்மைக் குழு– அனைத்து வகை அரசுப் பள்ளிகள் – 2024 ஜனவரி மாதம் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடத்துதல் – வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு.

**பார்வை:** பள்ளிக்கல்வி ஆணையர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் ஒருங்கிணைந்தப் பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் இணைச் செயல்முறைகள் ந.க.எண். 2223 / C7 / பமேகு / ஒபக / 2022, நாள்: 21.07.2022

*** *** ***

பார்வையில் கண்டுள்ள செயல்முறைகளின்படி 2024–ஆம் ஆண்டிற்கான பள்ளி மேலாண்மைக் குழுவின் முதல் கூட்டமானது அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் வருகிற 05.01.2024, வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் 03:00 மணி முதல் 04:30 மணி வரை நடத்திட அறிவுறுத்தப்படுகிறது. இக்கூட்டத்தில் பின்வரும் கூட்டப் பொருள்கள் குறித்து விவாதித்து தீர்மானங்கள் இயற்றிடக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**அ) கூட்டப்பொருள் நிரல்கள்**

1) **<u>பள்ளிகளைத் தூய்மைப்படுத்துதல்:</u>** 2024, ஜனவரி 8–ஆம் தேதி முதல் 10–ஆம் தேதி வரை பள்ளிகளைத் தூய்மைப்படுத்தும் நிகழ்வானது பள்ளிகளில் நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பெரும் நிகழ்வில் பள்ளி மேலாண்மைக் குழுவினர் பங்கேற்பது என்பது மிகவும் முக்கியமானதாகும். இதுகுறித்துப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் முடிவுசெய்யவும், பெற்றோர்களைப் பெருமளவில் இம்முன்னெடுப்பில் பங்கேற்கவும் தலைமையாசிரியர்கள் வழியாகக் கேட்டுக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. (இதுகுறித்தான வழிகாட்டுதல்கள் பள்ளிக் கல்வித் துறை இயக்குநரால் வழங்கப்படும்.)

2) **<u>அரசாணைகள்:</u>** பள்ளி மேலாண்மைக் குழுக்களை வலுப்படுத்துதல் சார்ந்து வந்துள்ள இரண்டு முக்கிய அரசாணைகளை [G.O. (Ms) No. 239 dated 14.12.2023 மற்றும் G.O. (Ms) No. 245 dated 22.12.2023] கீழ் உள்ள QR Code வழியாக பதிவிறக்கம் செய்து, அதன் நோக்கங்களை கூட்டத்தில் தவறாது பகிர்ந்துகொள்ள அறிவுறுத்தல்கள் வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

SCAN to download GOs

3) **மின்சாரம் தொடர்பான தேவைகள்:** பெற்றோர் குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கும் மின்சார கம்பங்களை அகற்றுதல், மாற்றி அமைத்தல் மற்றும் அது தொடர்பான தேவைகளை குழுவில் ஆலோசித்து தீர்மானங்கள் இயற்றிப் பெற்றோர் செயலியில் உள்ளீடு செய்யவேண்டும்.

4) **பள்ளி வளாகம்/அருகில் போதைப் பொருள் பயன்பாடு தடுத்தல்/கண்காணித்தல்:**

பள்ளி வளாகத்தினுள், வளாகத்திற்கு வெளியே குழந்தைகளைப் பாதிக்கும் போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் குழந்தைகள் பயன்படுத்துவதை அடையாளம் கண்டு தடைசெய்யத் தேவையான நடவடிக்கைகளை குழுவில் ஆலோசித்து தீர்மானம் இயற்றி பெற்றோர் செயலியில் உள்ளீடு செய்யவேண்டும்

5) **உயர்கல்வி வழிகாட்டி:** அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் உயர்கல்வியில் சேர்வதற்கு உதவிடும் வகையில் கல்லூரி நாட்டுநலப் பணித்திட்ட மாணவர்கள் 20 மணி நேரம் தமது பங்களிப்பைச் செலுத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. [GO (Ms.) No. 78, நாள் 13.09.2023]

   a. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட உயர்கல்வி வழிகாட்டி குழுவினர் பள்ளி மேலாண்மைக் குழு கூட்ட நாளன்று பள்ளிக்கு வருகைதரக் கூடிய கல்லூரி நாட்டுநலப் பணித்திட்ட மாணவர்கள் தங்களை அறிமுகம் செய்துகொள்ள வழிவகை செய்ய தலைமையாசிரியர்களை கேட்டுக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

6) **பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனுடைய குழந்தைகளைக் கண்டறியும் கணக்கெடுப்பு பணி மற்றும் இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ள மாணவர்கள்:**

- 6 முதல் 18 வயதுடைய பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனுடைய குழந்தைகளை கண்டறிய **சிறப்புக் கணக்கெடுப்பு பணி ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்திலிருந்து** நடைபெற்று வருகிறது. இக்கணக்கெடுப்பு பணியில் கண்டறியப்பட்ட "மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய குழந்தைகளை (to be Admitted)" பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மீண்டும் பள்ளியில் சேர்க்க துணை புரியுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

- மேலும், மாணவர்களின் வருகையின் அடிப்படையில் நீண்ட நாட்களாக பள்ளிக்கு வராத மாணவர்களை (30 நாட்களில் 15 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள்) இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ளதாகக் (Potential Dropout

students) கருதி அவர்களது விவரங்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினார்களுக்கு பெற்றோர் செயலியில் காண்பிக்கப்படும். அதன் அடிப்படையில் அம்மாணவர்களை பள்ளியில் தக்கவைக்கத் தேவையான நடவடிக்கைகளை பள்ளி மேலாண்மைக் குழு மேற்கொள்ள வேண்டும்.

7) <u>10, 11 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்கள் திருப்புதல் தேர்வு மற்றும் பொதுத்தேர்வு எழுதுவதை உறுதி செய்தல்:</u> காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வுகளில் வருகை புரியாத 10, 11 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்களின் பெயர் பட்டியலைத் தலைமையாசிரியரிடம் பெற்று, அவர்களது பெற்றோருக்குத் தக்க ஆலோசனை வழங்கி, மாணவர்களுக்குத் தேவையான ஆதரவும், ஊக்கமும் வழங்கி அவர்கள் அனைவரும் திருப்புதல் தேர்வு மற்றும் பொதுத் தேர்வு எழுதுவதைப் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் உறுதி செய்ய வேண்டும்.

8) <u>CWSN:</u>

- கடந்த 2023 நவம்பர் மாதம் வழங்கப்பட்ட சைகை மொழி விழிப்புணர்வு சுவரொட்டி பள்ளி வளாகத்திலும், வகுப்பறையிலும் இருப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

- பள்ளியில் படிக்கும் சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவர்களுக்குச் சிறப்பு பயிற்றுநர்கள் மூலம் உருவாக்கப்பட்ட தனிநபர் கல்வித் திட்டத்தின்படி சிறப்புக் கல்வி வழங்கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

மேற்காண் கூட்டப்பொருள் நிரல்கள் தவிரப் பள்ளியின் வளர்ச்சி சார்ந்த பிற தேவைகள் குறித்தும் விவாதித்து தீர்மானங்கள் நிறைவேற்றி பெற்றோர் செயலியில் பதிவேற்றிட தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஆ) பிற வழிகாட்டுதல்கள்**

1) பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் பங்கேற்க ஏதுவாக உறுப்பினர்கள் அனைவருக்கும் கூட்டம் குறித்த தகவல்களை இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே வழங்கிட தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2) பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் துவங்குதற்கு முன்னதாகக் கூட்ட நிகழ்ச்சி நிரல், கூட்டப் பொருள் குறித்த விவரங்களைச் சுற்றறிக்கை வழியாகப் அனைத்து ஆசிரியர்களுக்கும் தலைமையாசிரியர் தெரியப்படுத்த வேண்டும்.

3) கூட்டம் முடிந்த பிறகு கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை பெற்றோர் செயலியில் தலைமையாசிரியர்/தலைவர் உள்ளீடு செய்ய வேண்டும்.

4) கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை/தீர்மானங்களை பள்ளி மேலாண்மைக் குழுவில் உள்ள ஆசிரியர் பிரதிநிதி உறுப்பினர் உதவியுடன் பள்ளி அறிவிப்புப் பலகையில் (notice board) அனைத்து ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் படித்து அறிந்துகொள்ள ஏதுவாக காட்சிப்படுத்த வேண்டும்

5) மாவட்டக் கள அலுவலர்கள், பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றிப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

மேற்காண் கூட்டப் பொருள் நிரல்கள் (Meeting Agendas) மற்றும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றிக் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட நடவடிக்கைகளைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மேற்கொள்ளவும், அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் உரிய நேரத்தில் கூட்டம் நடத்தப்படவும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

(1) மாதாந்திரக் கூட்ட நிகழ்வு அட்டவணை
(2) நிலையானக் கூட்டப்பொருள் நிரல் – Video Link QR Code

மாநிலத் திட்ட இயக்குநருக்காக

**பெறுநர்:**

1) முதன்மைக் கல்வி அலுவலர்கள்

**நகல்:**

1) மாவட்ட ஆட்சியர்

2) பள்ளி மேலாண்மைக் குழு தலைவர்

**இணைப்பு–1**

## பள்ளி மேலாண்மைக் குழு – மாதாந்திரக் கூட்ட நிகழ்வு அட்டவணை

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| 3:00 –3:10 | பள்ளி வளாகத்தைப் பார்வையிடுதல் | கூட்டம் ஆரம்பிக்கும் முன்னர் குழு உறுப்பினர்கள் அனைவரும் பள்ளி வளாகம், வகுப்பறை, கழிவறை, குடிநீர் வசதிகள், சமையல் அறை, சமையல் பொருட்கள் வைப்பறை, நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பார்வையிடுதல் | 10 நிமிடங்கள் |
| 3:10 –3:15 | ஊக்கமூட்டும் காணொலிகள் திரையிடல் | செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் விதம் பள்ளி மேலாண்மைக் குழுக் குறித்தக் காணொலிகளைத் திரையிடுதல் | 5 நிமிடங்கள் |
| 3:15 –3:20 | வருகைப் பதிவு | உறுப்பினர்களின் வருகையைக் கைப்பேசி செயலியில் தலைவரால் பதிவு செய்யப்படுதல் | 5 நிமிடங்கள் |
| 3:20 –3:25 | வரவேற்பு | கூட்ட அழைப்பாளரான தலைமை ஆசிரியர் உறுப்பினர்களை வரவேற்றுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தல். | 5 நிமிடங்கள் |
| 3:25 –3:35 | இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களின் பங்கேற்பு | பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடைபெறும் நாளன்று 3 இல்லம் தேடிக் கல்வித் தன்னார்வலர்களை சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து அவர்கள் சார்ந்த மையத்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, வருகைப் பதிவு, கற்றல் அடைவு மற்றும் அடுத்த இரண்டு மாதத்திற்கானச் செயல் திட்டம் குறித்துக் கலந்தாலோசித்தல். | 10 நிமிடங்கள் |
| 3:35 –3:55 | திட்டமிடுதலுக்கான கருப்பொருட்கள் | • கூட்டத்தின் நோக்கத்தை தலைமை ஆசிரியர் எடுத்துக் கூறுதல்.<br>• மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள கூட்டப் பொருள் நிரல்களையும் ஆலோசித்துத் திட்டமிடுதலுக்கான கூட்டப் பொருள் நிரலை தயாரித்தல்.<br>• கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்ட கூட்டப் பொருள் நிரல்களை வாசித்தல். | 20 நிமிடங்கள் |

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| | | • வேறு முக்கியத் தவிர்க்க இயலாதக் கூட்டப் பொருள் நிரல்கள் ஏதேனும் இருப்பின் குழு உறுப்பினர்களிடம் கேட்டறிந்துச் சேர்த்துக் கொள்ளுதல்.<br>• முந்தையக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை ஒவ்வொன்றாக வாசித்து அதன் தற்போதைய நிலை, முன்னேற்றம், சவால்கள் ஆகியவற்றை விவாதித்துத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்துத் தீர்மானித்தல் | |
| 3:55 –4:25 | • கூட்டப் பொருள் நிரல் (meeting agenda) மீதான விவாதம்<br>• தீர்மானங்களை செயலி மற்றும் பதிவேட்டில் பதிவு செய்தல் மற்றும் கையொப்பம் பெறுதல் | • முன்பே தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கூட்டப் பொருள் நிரல்கள் ஒவ்வொன்றாகக் குழுவில் கலந்தாலோசித்து, விவாதித்து உரிய தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.<br>• மேற்கொள்ளப்பட்டத் தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியளவு, நிதி ஆதாரம், பொறுப்பாளர்கள், தொடர்புடையத் துறைகளின் ஒத்துழைப்பு, செயலை முடிப்பதற்கான கால அளவு ஆகியவற்றை நன்கு திட்டமிட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றுதல்.<br>• ஒருமனதாக அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டத் தீர்மானங்களைத் தீர்மானப் பதிவேட்டில் / செயலியில் பதிவு செய்து வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல் | 30 நிமிடங்கள் |
| 4:25 –4:30 | கூட்டம் நிறைவு செய்தல் | பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுதல் | 5 நிமிடங்கள் |

**இணைப்பு–2:**

Scan the QR Code: பள்ளி மேலாண்மைக் குழுவின் ஒவ்வொரு மாதாந்திரக் கூட்டத்திலும் கட்டாயமாக விவாதிக்கப்பட வேண்டிய நிலையானக் கூட்டப்பொருள் நிரல் (Standard Meeting Agenda) காணொலி வடிவில்.